சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No:109/2019 Date: 11.09.2025

வாதி தரப்பு சாட்சி–1(P.W.1) ன் வாக்குமூலம் (1872 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திரு.சம்சுல் ஆரிப், கிரேடு –2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : ஜெயபாண்டியன் | சாதி | : | |
| த/பெ | : பரமசிவம் | சமயம் | : | |
| கிராமம் | : | தொழில் | : | |
| தாலுகா | : | வயது | : | 61 |

முதல் விசாரணை–

நான் இவ்வழக்கில் வாதி. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கு விபரங்கள் தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 09.03.1946 ம் தேதி அசல் வழக்கு எண்.15/1945 ல் இராமநாதபுரம், சார்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1**. 29.05.2005 ம் தேதி வாதி டிரஸ்டின் பொதுக்குழு தீர்மானம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2**. 20.08.2006 ம் தேதி வாதி டிரஸ்டிகள் கூட்ட தீர்மானம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3**. 22.07.2006 ம் தேதி லேட்.காந்திமதியம்மாள் கடைசியாக செலுத்திய வாடகை ரசீது சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4**. 29.08.2006 ம் தேதி வாதி தரப்பில் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5**.

14.09.2006 ம் தேதி லேட்.காந்திமதியம்மாள் தனது வழக்கறிஞரின் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6**. அசல் வழக்கு எண். 82/2007 ன் வழக்குரை நகல் **வா.சா.ஆ.7**. அசல் வழக்கு

எண். 82/2007 ன் சீர்திருத்த வழக்குரை நகல் **வா.சா.ஆ.8.** அசல் வழக்கு எண். 82/2007 ல் 1 ம் பிரதிவாதி தரப்பு தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை சார்பு நகல் **வா.சா.ஆ.9**. அசல் வழக்கு எண். 82/2007 ல் 3 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை சார்பு நகல் **வா.சா.ஆ.10.** 1 ம் பிரதிவாதி லேட்.காந்திமதியம்மாள் வாரிசுகளை சேர்க்க கோரி தாக்கல் செய்த இ.,ம.எண்.628/2014 மனு சார்பு நகல் **வா.சா.ஆ.11.**

சீர்திருத்தம் செய்யக்கோரி தாக்கல் செய்த மனு இ.ம.எண்.230/2015 நகல் **வா.சா.ஆ.12.** 08.12.2015 ம் தேதி அசல் வழக்கு எண்.82/2007 ன் தீர்ப்புரை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.13.** 08.12.2015 ம் தேதி அசல் வழக்கு எண்.82/2007 ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.14.** 19.08.2016 ம் தேதிய வாதி டிரஸ்ட் கூட்ட தீர்மானம் உண்மை நகல் **வா.சா.ஆ.15.** 26.03.2018 ம் தேதிய வாதி டிரஸ்ட் கூட்ட தீர்மானம் உண்மை நகல் **வா.சா.ஆ.16.** 26.03.2018 ம் தேதி வாதி தரப்பில் 1 முதல் 9 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு, அஞ்சலக ரசீது மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.17.**

(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)